TAMIL NADU
GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No.21] CHENNAI WEDNESDAY, JUNE 3,2009
Aavani 12, Thiruvalluvar Aandu-2038


# Part VI --- Section 2
(Supplement)

Notifications of interest to a section of the public issued by
Heads of Departments, etc.

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## 2009ஆம் ஆண்டு கட்டணங்கள் மற்றும் அபராதங்கள்(திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள்

அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/ஒழுங்குமுறைவிதிகள்/**f&f**/4/2-4, 11-5-2009 நாளிட்டது.

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (g)கூறின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட தன்னுடைய அதிகாரங்களைச் செலுத்தி 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறைவிதிகளை 2004 பிப்ரவரி 18ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் முன்னர் தெளிவாக உள்ளடக்காத ஒருசில அலுவற்பணிகள் பொறுத்து கட்டணங்கள் வசூலிப்பதற்கான வகைமுறையைச் செய்வது குறித்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்கும் நோக்கத்திற்காக மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அதன் முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (சட்ட எண்.36/2003) 86ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (g)கூறின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி (இதன் பின்பு முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறைவிதிகளுக்குப் பின்வரும்

திருத்தங்களைத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் செய்துள்ளது.

### தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை
### 2009ஆம் ஆண்டு கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள்.

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. **முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியில், அட்டவணையில் 4ஆம் இனம் மற்றும் அதன் பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

"4 மின் வாங்குகை அல்லது கொள்முதல் நடைமுறை தொடர்பான உடன்பாட்டின் ஒப்புதல், -

| | | |
|---|---|---|
| (i) | மரபு சார்ந்த எரிபொருள் அடிப்படையிலான நிலையம் தொடர்பாக உடன்பாட்டுக்காலம் ஓர் ஆண்டும் மற்றும் அதற்கு மேலும் இருக்குமானால், | மெகாவாட் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.2500/- |
| (ii) | இணை-மின் உற்பத்தி உள்ளடங்கலான மரபுசாரா | மெகாவாட் ஒன்றுக்கு அல்லது அதன் |

| | | |
|---|---|---|
| | எரிசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் தொடர்பாக உடன்பாடுக்காலம் ஓர் ஆண்டும் மற்றும் அதற்கு மேலும் இருக்குமானால், | பகுதிக்கு ரூ.2000/- |
| (iii) | மரபுசார்ந்த எரிபொருள் அடிப்படையிலான நிலையம் தொடர்பாக உடன்பாட்டுக்காலம் ஓர் ஆண்டிற்குக் குறைவாக இருக்குமானால் | மெகாவாட் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.1250/- |
| (iv) | இணை-மின்உற்பத்தி உள்ளடங்கலான மரபுசாரா மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் தொடர்பாக உடன்பாட்டுக்காலம் ஓர் ஆண்டிற்குக் குறைவாக இருக்குமானால், | மெகாவாட் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.1000/- |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்